## உடபலாத பிரதேச சபை

## கண்டி மாவட்டம்

-------------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2014 ஏப்ரில் 01 திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 மார்ச் 27 திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2014 திசெம்பர் 23 திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

1.2 அபிப்பிராயம்

-------------------

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கிய விடயங்கள் ஏற்படுத்தும் தாக்கங்கள் தவிர, நிதிக் கூற்றுக்களின் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உடபலாத பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயற்பாடுகள் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

------------------------------------------------------------

1.3.1 கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மைகள்

-----------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) கணக்குகள் தயாரிக்கும் போது அட்டுறு அடிப்படை பயன்படுத்தப்பட்டிருப்பதாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட்டிருந்த போதும், 07 வருமான விடயங்கள் தவிர ஏனைய வருமான விடயங்களில் நிதி அடிப்படை பயன்படுத்தப்பட்டிருந்தது.

(ஆ) ஒரு வருடத்திற்கு குறையாத காலப்பகுதிக்காக நிலையான வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்டிருந்த ரூபா 11,771,277 தொகை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்காதவாறு நடைமுறை சொத்துக்களின் கீழ் காட்டப்பட்டிருந்தன.

1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

---------------------------------------

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டது.

(அ) 2012 ஆண்டிற்கான நிர்மான வேலை கடன்பட்டோர் மீதிகளுக்காக 2013 ஆண்டின் போது நிதி கிடைக்கும் போது நிதி பெறப்பட்ட மூலங்ளை வெவ்வேறாக சீராக்கல் மேற்கொள்ளல் மற்றும் சரி செய்வதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படாமல்,

ஒவ்வொன்றையும் சமப்படுத்திய பின்னர் காணப்பட்ட மீதியாகிய ரூபா 12,869 தொகையை நாட்குறிப்பு இலக்கம் 95 இன் மூலம் சீராக்கல் மேற்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2013 திசெம்பர் 31 திகதிக்கு முன்னர் பெற்றிருந்த ரூபா 179,852 இற்கான வருமானம் இறுதிக் கணக்குகளில் ரூபா 155,618 தொகை என பதிவு செய்யப்பட்டிருந்தது.

1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

--------------------------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) நிலுவை வீதவரி கணக்குகளில் மற்றும் நிலுவை ஓய்வூதிய பங்களிப்பு கணக்கின் மீதி பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 124,353 தொகை மற்றும் நிலுவை வீதவரி வருமான கணக்கு மற்றும் வீதவரி பதிவேட்டுடன் ஒப்பீடு செய்யும் போது ரூபா 20,000 தொகை ஒன்று இணங்காமை ஒன்று வெளிப்படுத்தப்பட்டது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக் கூற்றுக்களுடன் சமர்பிக்கப்பட்டிருந்த பொறியும் பொறித்தொகுதியும் பட்டோலையின் பெறுமதி ரூபா 3,729,753 தொகை எனினும், அவற்றின் சரியாான கூட்டுத்தொகை ரூபா 5,937,303 என காணப்பட்டமையால் ரூபா 2,207,550 இற்கான வித்தியாசமொன்று அவதானிக்கப்பட்டது.

(இ) வருடாந்த உருப்படி சரிபார்த்தலின் போது பதிவு செய்யப்பட்டிருக்காத 08 பொறியும் பொறித் தொகுதி 23 விடயங்களை இணங்கண்டிருந்த போதும் அவற்றை மீளாய்வாண்டின் போது கணக்குகளுக்கு எடுத்திருக்கவில்லை.

1.3.4 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

--------------------------------------------------------------------------------------

(அ) பெற வேண்டிய கணக்குகள்

-----------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய கணக்குகளின் மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 37,323,558 ஆகக் காணப்பட்டதுடன், அவற்றில் 01 வருட காலத்தை மிகைத்துள்ள கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 5,834,384 ஆக காணப்பட்டது.

(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்

-----------------------------------------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கூட்டுத் தொகை ரூபா 27,956,878 இற்கான செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதியில் ரூபா 4,662,361 இற்கான 01 வருடத்தை மிகைத்திருந்த மீதிகள் காணப்பட்டன. அம்மீதியில் 2014 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 4,404,824 இற்கான தொகையொன்று மேலும் செலுத்தவேண்டியிருந்தது.

1.3.5 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

-----------------------------------------------------------

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்பிக்கப்படாமையால், நிதிக் கூற்றுக்களில் காணப்படும் 06 கணக்கு விடயங்கள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 123,815,209 இற்கான

கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்வதற்கு முடியாதிருந்தது.

1.3.6 சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) 2012 நவம்பர் 30 ஆந் திகதிய இலக்கம் 1787 கொண்ட இலங்கை குடியரசின் வர்த்தமானி அறிவித்தல் | பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தில் பொருத்தப்பட்டிருந்த விளம்பர அறிவித்தல்களில் இருந்து அறவிடப்படவேண்டியிருந்த ரூபா 243,975 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) 1988 இன் 56 ஆம் இலக்கம் மற்றும் 2000 இன் 53 ஆம் இலக்க சட்டங்களின் மூலம் திருத்தப்பட்ட தேசிய சுற்றாடல் சார் சட்டம் மற்றும் அதன் கீழ் அதிகாரம் அளிக்கப்பட்டிருந்த பிரமாணங்களுக்கு இணங்க 2008 ஜனவரி 25 திகதிய இலக்கம் 1533/16 கொண்ட அதி விஷேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் 2012 நவம்பர் 30 கொண்ட வர்த்தமானி அறிவித்தல் | அதிகாரப் பிரதேசத்தில் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரங்கள் பெறப்பட வேண்டிய இனத்தை சேரும் 64 நிர்மாண வேலைகளுக்காக சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை. |

2 நிதி மீளாய்வு

2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2013 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 23,911,697 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 20,364,073 ஆக காணப்பட்டமையால், நிதி விளைவுகளில் ரூபா 3,547,624 இற்கான முன்னேற்றமொன்று காணப்பட்டது.

2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கான வீதவரி வருமானம் நூற்றிற்கு 58 இனாலும் மற்றும் சேவைகளுக்கான கட்டண வருமானம் நூற்றிற்கு 82 இனாலும், அதற்கு நேர்மாறாக வழுங்கல்கள் மற்றும் உபகரணங்கள் செலவுகள் நூற்றிற்கு 47 இனாலும், போக்குவரத்து தொடர்பாடல் தேவைகள் மற்றும் சேவைகள் நூற்றிற்கு 33 இனாலும், உதவிநிதி, பங்களிப்பு தொகை, மானியச் செலவுகள் நூற்றிற்கு 30 இனாலும் அதிகரித்துள்ளமை, மற்றும் மூலதன உதவி நூற்றிற்கு 34 இனாலும் குறைதல் காரணமாக, மீளாய்வாண்டிற்கான மிகை நூற்றிற்கு 38 இனால் குறைவடைந்துள்ளது.

(ஆ) மீளாய்வாண்டிற்கான நிரந்தர பதவியணிச் சம்பள மீளளிப்பு தொகையான ரூபா 18,820,800 தொகையொன்று மத்திய மாகாண சபையில் இருந்து கிடைத்திருந்த போதும், ஆண்டிற்கான செலவு ரூபா 17,938,801 என காணப்பட்டமையால் சம்பள மீளளிப்பு தொகையில் ரூபா 881,999 தொகை மீதியாகக் காணப்பட்டது. அதனை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையால் அக்காரணியும் ஆண்டிற்கான மிகை அதிகரிப்பதற்கான காரணமாகியுள்ளது.

2.3 தொழிற்பாடு மூலதன முகாமைத்துவம்

-------------------------------------------------------------

நடைமுறை சொத்துக்கள் மற்றும் நடைமுறைப் பொறுப்புக்களிடையே விகிதாசாரம் மீளாய்வாண்டின் போது 2.3:1 ஆக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது அது 3:1 ஆக காணப்பட்டது. அவற்றில் இருப்புக்களின் பெறுமதியை அகற்றிய பின்னர் உடனடி வீதம் 2.1:1 ஆக காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் போது அவை 2.8:1 ஆக காணப்பட்டது. இதன் பிரகாரம் சபையின் திரவத் தன்மை சிறந்த நிலையில் காணப்படவில்லை என அவதானிக்கப்பட்டது.

2.4 வருமான நிருவாகம்

-----------------------------

2.4.1 வீதவரி

----------

மீளாய்வாண்டு ஆரம்பத்தில் உள்ளவாறு ரூபா 1,533,411 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டிற்கான பில் போடப்பட்டவை ரூபா 1,283,597 ஆக காணப்பட்டது. ஆண்டிற்கான அறவீடுகளின் சதவீதம் நூற்றிற்கு 21 உம் தொகை மற்றும் பில் போடப்பட்டவைகளில் நூற்றிற்கு 48 வீதமாகும் 2013 திசெம்பர்31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ரூபா 1,831,329 இற்கான மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதி வரை நிலுவையாகக் காணப்பட்ட ரூபா 689,374 தொகை தொடர்பாக 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 158 இன் பிரகாரம் அறவீடு செய்வதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

2.4.2 குத்தகை

-------------

2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 58,728 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டதுடன் , மீளாய்வாண்டிற்கான பில் போடப்பட்டவைகள் ரூபா 2,950 ஆக காணப்பட்டது. அவற்றில் ஆண்டின் போது அறவிடப்பட்டவை நூற்றிற்கு 0 ஆக

காணப்பட்டதுடன் ஆண்டு இறுதியின் போது நிலுவை ரூபா 61,678 ஆகக் காணப்பட்டது. அம் மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 36,825 தொகை ஒன்று தொடர்ந்து அறவிடப்பட வேண்டியிருந்தது எனினும், இந்த நிலுவை தொகையை அறவீடு செய்வதற்காக சபை சட்ட நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

2.4.3 நீர் கட்டணம்

--------------------

மீளாய்வாண்டு ஆரம்பத்தின் போது ரூபா 1,607,507 இற்கான நிலுவை ஒன்று காணப்பட்டதுடன், ஆண்டின் போது பில் போடப்பட்டவை ரூபா 500,250 ஆக காணப்பட்டது. அவற்றில் ஆண்டின் போது அறவிடப்பட்டவைகள் முறையே ரூபா 147,804 தொகை மற்றும் ரூபா 96,504 ஆக காணப்பட்டமையால் அவற்றின் சதவீதம் முறையே நூற்றிற்கு 9 வும் மற்றும் நூற்றிற்கு 19 வும் ஆகும். ஆண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 1,863,449 காணப்பட்டதுடன், அதனை அறவீடு செய்வதற்காக முறையான செயற்திட்டமொன்றினை கடைபிடித்திருக்கவில்லை.

2.4.4 கடை வாடகை

----------------------

சபைக்கு சொந்தமான கடைகளுக்காக செலுத்தப்படாத வாடகை ரூபா 446,789 தொகை ஒன்று மீளாய்வாண்டு ஆரம்பத்தில் காணப்பட்டதுடன், ஆண்டின் போது பில் போடப்பட்டவை ரூபா 2,305,628 ஆகும். அவற்றில் ரூபா 554,255 தொகை மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிலுவையாகக் காணப்பட்டது. அம் மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 460,710 தொடர்ந்தும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

2.4.5 ஏக்கர் வரி

---------------

மீளாய்வாண்டு ஆரம்ப நிலுவை ரூபா 108,765 ஆக காணப்பட்டதுடன் ஆண்டின் போது பில் போடப்பட்டவைகள் ரூபா 58,787 ஆகும். அவ் வருமானத்தை அறவீடு செய்தல் முறையே ரூபா 62,157 தொகை மற்றும் ரூபா 31,668 தொகையும் காணப்பட்டமையால், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 73,728 காணப்பட்டது. அம் மீதியில் 2014 செப்டம்பர் 30 திகதியில் உள்ளவாறு ரூபா 22,698 தொகையொன்று தொடர்ந்து அறவிடப்படவேண்டிக் காணப்பட்டது.

2.4.6 தொலைபேசி டவர் கட்டணம்

-------------------------------------------

சபையின் அதிகார பிரதேசத்தில் 2008-2010 இடைப்பட்ட காலப்பகுதியில் நிறுவப்பட்டிருந்த செலுத்தல் டவர்கள் 17 இனங்காணப்பட்டிருந்தன, எனினும் அவை தொடர்பாக துணை விதிகள் ஆக்கப்பட்டு சபைக்கு வருமானத்தை பெற்றுக் கொள்வதற்காக உரிய கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக, நிறுவியதற்கான கட்டணம் ரூபா 1,650,000 வினை மிகைத்துள்ள வருமானம் ஒன்று மற்றும் வருடாந்த அனுமதிப்பத்திர கட்டணம் ஆண்டிற்கு ரூபா 102,000 மிகைத்த வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

2.4.7 ஏனைய வருமானங்கள்

---------------------------------

சபையின் அதிகாரப் பிரதேசத்தில் உல்லாசப் பிரயாணச் சபையில் பதிவு செய்திருக்கும் 05 ஹோட்டல்கள் மற்றும் தங்குமிடங்களை இனங் காணப்பட்டிருந்த போதும் 2013 ஆண்டின்

போது அனுமதிப்பத்திர கட்டணம் என ரூபா 492,274 தொகை மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் பிழையாக கணிக்கப்பட்டு அக் கட்டணத்தை அறவிடப்படாமையால் சபைக்கு சேகரிக்கக் கூடியதாக இருந்த வருமானம் ஒன்றினை சபை இழந்துள்ளது.

3 செயற்பாட்டு திறமையின்மை

-----------------------------------------

3.1 முகாமைத்துவ திறமையின்மை

---------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) திரவத் தேவைக்கு தேவையான காசுத் தொகையை விட அதிகமான பணத் தொகையொன்று தொடர்ந்து நடைமுறை கணக்கில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமையால், சபைக்கு தேவையான வட்டி வருமானம் ஒன்றினை இழக்க நேரிட்டுள்ளது.

(ஆ) நீர் மனுக்கள் இன்றி நிலையான கட்டணம் ஒன்று அறவீடு செய்வதன் மூலம் 529 நுகர்வு நிலையங்களுக்கு நீர் வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தமையால் சபைக்கு அறவிடக் கூடியதாக இருந்த வருமானம் வரையறுக்கப்பட்டிருந்தது.

(இ) சபையினால் செயற்படுத்தப்பட்டு, நடைமுறைப்படுத்தப்படும் நீர் செயற்திட்டங்கள், சுகாதாரம் பாதுகாப்பு ரீதியாகவும் மற்றும் முறையான திட்டமிடல், ஆய்வு மற்றும் முறையான மேற்பார்வை இன்றி சபையின் பொறுப்பினை முற்றாகத் தவிர்ந்து, பொது மக்களுக்காக குடிநீர் வழங்கப்படுகிறது என கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. இவ்வாறு நடத்தப்படும் நீர் செயற்திட்டங்கள் மூலம் 2013 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கிடைக்க வேண்டிய நீர் கட்டணத்தின் பெறுமதி ரூபா 1,863,449 தொகையில் போலியான பில் போடப்படல் மற்றும் பிழைகளுடன் காட்டப்பட்டுள்ள கணிசமான அளவு தொகைகளும் அடங்கியிருந்தன என தலைவர் எனக்கு அனுப்பியிருந்த பதில்களின் மூலம் மேலும் வெளிப்படுத்தப்பட்டது.

(ஈ) அமைய அடிப்படையில் ஆட்சேர்க்கப்பட்டிருந்த நபர்கள் சாரதிகளாக வாகனங்களை ஓட்டுவதற்கு பயன்படுத்தப்பட்டிருந்தனர்.

(உ) சபையில் காணப்படும் பதவியணிகளில் 25 பதவிகள் வெற்றிடமாக காணப்பட்டதுடன் 02 அபிவிருத்தி அலுவலர் பதவிகள் மிகையாகக் காணப்பட்டது.

3.2 செயற்பாட்டுத் திறமையின்மை

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) புஸ்ஸல்லாவ உப அலுவலகத்தினால் பல வருட காலமாக 12 வீடுகள் தொடர்பாக சேகரித்திருந்த வீட்டு வாடகை பிணை வைப்பு ரூபா 28,224 தொகையினை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அதிகார பிரதேசத்தில் நடத்தப்படும் தொழில் முயற்சிகளை இனங்காண்பதற்காக மீளாய்வாண்டு தொடர்பாக வருடாந்த கணிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. அத்துடன், அதன் காரணமாக வர்த்தக அனுமதிப்

பத்திரம் 1212 நிறுவனங்களுக்கு மாத்திரமே வழங்கப்பட்டிருந்தது. அதனை முன்னைய ஆண்டின் 1525 உடன் ஒப்பீடு செய்யும் போது நூற்றிற்கு 21 இற்கான குறைவு ஒன்று காணப்பட்டது.

(இ) பதவியணியில் 03 நபர்களிடம் அறவிடப்பட வேண்டியிருந்த இடர் கடன் ரூபா 61,100 இனை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) பதிவிலக்கம் CPPB – 7657 கொண்ட கப் வண்டியின் விபத்துக்கு உள்ளாகி ரூபா 460,385 இற்கான நட்டமொன்று ஏற்படுத்தியிருந்த போதும், அது தொடர்பாக முறையான விசாரணை ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை.

(உ) பதிவு இலக்கம் 301 - 9057 கொண்ட கார் வண்டிக்கு ஏற்பட்டிருந்த விபத்தின் மூலம் ரூபா 105,455 இற்கான நட்டமொன்று ஏற்பட்டிருந்த போதும், அதனை அறவீடு செய்வதற்கு மற்றும் திருத்த வேலை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஊ) 2013 ஆண்டின் போது 06 அங்கிகாரமற்ற நிர்மான வேலைகளை சபை அறிந்திருந்த போதும் அவை தொடர்பாக வெளிக்கள வேலை அலுவலர்களின் அறிக்கைகள் வழங்காமையின் காரணமாக, 2014 ஜூன் வரை சபை இறுதி நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

3.3 செயற்படுத்தப்படாத மற்றும் குறை பயன்பாட்டுச் சொத்துக்கள்

---

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெறுமதிகள் மதிப்பீடு செய்ய முடியாத 06 சொத்து விடயங்கள் நீண்ட காலமாக பயன்படுத்தப்படாமலும் குறை பயன்பாட்டுடனும் காணப்பட்டது.

3.4 ஒப்பந்த நிருவாகம்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) தெரிவு அடிப்படையில் பௌதீக பரிசோதனை மேற் கொள்ளப்பட்ட 07 பாதைகளின் மதிப்பீடுகளில் குறிப்பிடப்பட்டிருந்தவாறு மற்றும் மதிப்பீட்டு நியமங்களுக்கு இணங்க செயற்பட்டிருக்காத விடயங்களுக்காக மொத்தம் ரூபா 1,691,184 இற்கான கொடுப்பனவுகள் தொழில்நுட்ப அலுவலர்கள் சான்றுபடுத்தியிருந்தனர்.

(ஆ) இணைத் தொடர்பு கொங்கிரீட் கற்கள் பரப்பிய பாதைகளின் கொங்கிரீட் கற்களின் தர பரிசோதனை அறிக்கைகளுக்காக ரூபா 5,200 வீதம் 05 பாதைகளுக்காக ரூபா 26,000 இற்கான கொடுப்பனவு சான்று படுத்தியிருந்த போதிலும் அவ் அறிக்கை கணக்காய்விற்கு சமர்பித்திருக்கவில்லை.

4 கணக்கு நடைமுறை தன்மையும் நல்லாட்சியும்

---

4.1 கூட்டிணைந்த திட்டம்

---

மீளாய்வாண்டின் போது சபையில் கூட்டிணைந்த திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.2 கொள்வனவு திட்டம்

------------------------------

ரூபா 44,288,502 இற்காக மூலதனச் செலவுகள் சபையினால் மேற்கொண்டிருந்த போதும் மீளாய்வாண்டிற்காக கொள்வனவு திட்டமொன்று தயாரித்திருக்கவில்லை.

4.3 தொழிற்பாட்டுத் திட்டம்

-----------------------------------

சபையினால் மீளாய்வாண்டின் போது தொழிற்பாட்டுத் திட்டம் ஒன்று தயாரித்திருக்கவில்லை.

4.4 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

-----------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவி இருக்காமையால் குழுக் கூட்டங்கள் நடைபெற்றிருக்கவில்லை.

4.5 அகக் கணக்காய்வு

------------------------------

மீளாய்வாண்டின் போது சபையில் போதியளவு அகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

4.6 பாதீட்டுக் கட்டுப்பாடு

------------------------------

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம் மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளுடன் ஒப்பீடு செய்யும் போது 08 வருமான விடயங்களில் நூற்றிற்கு 13 தொடக்கம் நூற்றிற்கு 142 வரையும், 06 செலவு விடயங்களில் நூற்றிற்கு 15 முதல் நூற்றிற்கு 76 வரையும் முரண்கள் அவதானிக்கப்பட்டமையானது பாதீடு பயன்தரு கட்டுப்பாட்டு கருவி ஒன்றாக பயன்படுத்தி இருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

5 முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

-------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக வீஷேட கவனம் தேவைப்படுகிறது.

(அ) கணக்கீடு

(ஆ) அகக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்

(உ) கடன்பட்டோர், கடன் கொடுத்தோர் கட்டுப்பாடு

(ஊ) தொக்கு கட்டுப்பாடு

(எ) ஒப்பந்த நிருவாகம்